**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.496/2021**
**வழக்கு சாட்சி PW–14**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவராஜ்பிள்ளை | தாலுகா | : | கோவில்பட்டி |
| தந்தை பெயர் | : | பால்ராஜ் | தொழில் | : | காவல்துணைக் கண்காணிப்பாளர் (ஓய்வு) |
| கிராமம் | : | கோவில்பட்டி | வயது | : | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of September 03rd, 2025.

**(எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது காவல்துணைக் கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். இதற்கு முன்பு அச்சன்புதூர் வட்ட ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 02.11.2013 ம் தேதி, ஆய்க்குடி காவல்நிலையக்குற்றஎண்.31/2013 வழக்கை என்னுடைய மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவயிடங்கள் சென்று பார்வையிட்டு சாட்சிகளை விசாரணை செய்தேன். ஏற்கனவே அனைத்து சாட்சிகளும் முந்தைய காவல் ஆய்வாளர் திரு.ஸ்டீபன் ஜீ.ஆர். ஜோஸ் என்பவரிடம் கூறியது போலவே, என்னிடமும் கூறியதினால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. வழக்கு கோப்பினை பார்வையிட்டதிலிருந்தும், சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் சம்பவம் உண்மையென தெரிய வந்ததினால் வழக்கின் மாதிரி குற்றப்பத்திரிக்கை

பெற வேண்டி, திருநெல்வேலி மண்டல குற்ற வழக்கு தொடர்புத்துறை துணை இயக்குநரை அணுகி மாதிரி குற்றப்பத்திரிக்கை பெற்றேன்.

07.01.2014 ம் தேதி, இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை மாற்றம் செய்து மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் சொன்ன நாள், நேரத்தில் சம்பவயிடத்திற்கு சென்று பார்வையிடவில்லை என்றாலும், சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கின் விசாரணை அதிகாரி சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும், பார்வை மகஜர் மற்றும் வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்று பொருளுக்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல், எதிரிக்கு எதிராக தவறுதலாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.04 19:34:24 +0530